DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**CC.No.281/2023**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | மகாலெட்சுமி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | காளிமுத்து |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.06.2026

எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் K.சிறுவனூரில் வசித்து வருகிறேன். பட்டியல் சாட்சி 1 அமுதா என் தாயார். அவர் தற்போது இறந்துவிட்டார். எதிரிகளை தெரியும். தற்போது நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜர் இல்லை. கடந்த 01.08.2020 ம் தேதி காலை 11.00-12.00 மணிக்குள் நானும் என் அம்மாவும் என் அம்மாவிற்கு சொந்தமான இடத்தை உழுவதற்காக சென்றோம். அப்போது எதிரிகள் ராஜம்மாள், செல்வம், செல்லம், காளியம்மாள் ஆகியோர்கள் வந்தார்கள். 2 ம் எதிரி செல்வம் என் அம்மாவின் தலைமுடியை பிடித்து இழுக்க மற்ற எதிரிகள் முதுகில் கையால் அடித்தார்கள். அப்போது என் அம்மா கீழே

விழுந்துவிட்டார். பின்னர் 4 எதிரிகளும் சேர்ந்து என் அம்மாவை மிதித்தார்கள். எதற்கு இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டபோது வயலில் உழுக கூடாது என்று சொன்னார்கள். அதன்பிறகு என் அம்மா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம். எதிரிகள் அனைவரும் என் உறவினர்களா என்றால் இல்லை. பொதுவாகவே வயலில் டிராக்டர் உழும்போது ஊர் ஆட்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். என் அம்மா கொடுத்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தின்போது ஊர்ஆட்கள் இருந்தார்களா என்றால் ஆமாம், அவர்கள் யாரும் விலக்கிவிடவில்லை. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றும் எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் இடப்பிரச்சனை காரணமாக உள்ள முன்விரோத்தை மனதில் வைத்துகொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.